தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயயச	மலர்
சஎ	பிரமாதீச, கார்த்திகை	அ
	(1973 — நவம்பர் — டிசம்பர்)	

தமிழும் இலக்கியத் திறனாய்வும்

அர. சிங்காரவடிவேலன்

இலக்கியத் திறனாய்வு என்பது, ஆங்கிலக் கல்விமுறையின் செல்வாக்கால், இன்று தோன்றிய புதிய கலையாகக் கருதப்படுகிறது. இலக்கியம் பற்றிய விளக்கமும், இலக்கிய வகைகளும், இலக்கியத்தைப் படைப்பதற்கும் படிப்பதற்கும் உதவும் விதிமுறைகளும், இலக்கியத் திறனாய்வு பற்றிய ஆங்கில நூல்களிற் காணப்படுகின்றன. ஆங்கில நூல்களை ஆழ்ந்து நோக்கும்போது, இந்நூல்களிற் காணப்படும் கருத்துக்களில் பல, வேறு எங்கோ பார்த்த முகச்சாயல் உடையனவாகத் தோன்றுகின்றன. இலக்கணத் தொன்மையும் இலக்கியப் பன்மையும் கொண்ட பழந் தமிழ் மொழியில் இலக்கியத் திறனாய்வு இருந்ததா? இலக்கியத் திறனாய்வு பண்டில்லாமல் இன்று தோன்றிய புத்தம் புதுத் துறையா? இலக்கியத்தைப் பற்றித் தமிழர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா? பண்டு. திறனாய்வு உண்டெனின் எவ் வகையில் இருந்தது? இலக்கியத்தைப் படைப்பதற்கும் படிப்பதற்கும் தமிழர் வகுத்த விதிமுறைகள் யாவை? மேற்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பதே இக்கட்டுரை.

தமிழில் உண்டு

தமிழில் இலக்கியம் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இலக்கியம் உண்டு என்று ஒத்துக்கொண்டால், இலக்கியத் திறனாய்வும் உண்டு என்று ஒத்துக்கொண்டாக வேண்டும். மறுத்தால் 'என் தாய் மலடி' என்று சொல்வதாக அம்மறுப்பு அமையும். ஏன்? ஒருவன் இலக்கியத்தைப் படைத்துவிட்டாலே. அதனைப் பார்த்த மற்றொருவன் 'நன்று' என்றோ 'அன்று' என்றோ கூறித்தானே ஆகவேண்டும்?

குழந்தை பிறந்தவுடன் பேறு கேட்க வருபவர்கள் குழந்தையைப் பார்த்து, நிறம், மூக்கு, கண் முதலியவற்றைத் தாய்தந்தையர் நிறம் முதலியவற்ருேடு ஒப்பிட்டுப் பாராட்டியும், பக்குவமாகக் குறைசொல்லியும் உறுப்பாராய்ச்சி செய்வதைப் பார்க்கிருேம். அதுபோலவே புலவனின் குழந்தையாகிய இலக்கியமும் படிப்போரின் ஆராய்ச்சிக் கண்களைத் தப்பமுடியாது ஆதலால் இலக்கியம் பிறந்துவிட்டது என்ருல் திறனுய்வு எண்ணமும் வந்துவிட்டது என்று உணரவேண்டும். கணக்கற்ற இலக்கியங்களுக்குத் தாயான தமிழ் மொழியில் இலக்கியத் திறனுய்வும் இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். நவில்தொறும் நூல்நயம், அறிதோறும் அறியாமை, கற்றனைத்து ஊறும் அறிவு போன்ற திருக்குறள் ஆட்சிகளும் 'மதிப் புலவோர்க்கு ஆய்தொறும் அறிவு' என்ற திருவள்ளுவ மாலைத் தொடரும் இலக்கியத் திறனுய்வு முன்பிருந்தது என்பதைக் காட்டும் சான்றுகளாம்.

பண்டைநாள் திறனுய்வின் இயல்புகள்

திறனுய்வு பண்டிருந்தது என்ருலும் தமிழ்த் திறனுய்வு தனி இலக்கியத் துறையாகத் தழைக்கவில்லை. ஒப்பிட்டு ஆய்ந்த விதிகளின் தொகுப்பாகவும், படைப்பு விதிகளை வகுக்கும் இலக்கணங்களாகவும், நிறையை மட்டுமே பாராட்டும் உரைகளாகவும் விளங்கியது- பாண்டியர் வளர்த்த முச்சங்கங்களும் அவ்வப் போது நிகழ்ந்த அரங்கேற்றங்களும், பாங்கறிந்தேறிய பட்டி மன்றங்களும், இடைக்காலத்திய கதைச் சொற்பொழிவுகளும் இலக்கியத் திறனுய்வுப் பணிகளைச் செய்துவந்தன.

பழைய திறனுய்வு பாராட்டாகவே இருந்தது குறை கூறுவது படைப்பாசிரியனுக்குப் பழிசேர்ப்பது என்ற எண்ணம் அன்று நிலவியது. செயற்கரும் செயலாகிய இலக்கியத்தைப் படைப்பவன் தெய்வப் புலவன் என்றும், நூலைக் குறைகூறுவது ஆளைக் குறைகூறுவது என்றும், பண்டையோர் கருதினர். திருவள்ளுவரைத் தெய்வப் புலவர் என்று வழங்குவதும், திருவாசகத்துக்கு யாராலும் உரை வகுக்க முடியாதென்று கருதியதும் இக்கருத்தை வலியுறுத்தும். 'சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்தலே' இலக்கிய ஆசிரியனுக்கு ஆராய்ச்சியாளன் செய்யும் கைம்மாறு என்று கருதப்பட்டது. ஆதலால்: விருப்பு வெறுப்பின்றிக் குறைநிறைகளை எடுத்துக் காட்டும் அறிவியல் போக்கு பழைய திறனுய்வில் குறைவு புலமையை வழிபடும் உணர்ச்சிப் போக்கே மிகுதி. பாராட்டாக விளங்கிய பழைய திறனுய்வு முறைகளை இனிக் காண்போம்.

அமைப்பு விதிகளும் இலக்கணங்களும்

இலக்கியத் திறனாய்வின் தொடக்கம், ஒப்பியல் ஆராய்ச்சியாகவும் படைப்பிற்குரிய விதிகளை உருவாக்குவதாகவுமே அமைந்துள்ளது என்று மேலைநாட்டுத் திறனாய்வாளர் ★ அபர்கிராம்பி என்பவர் கருதுகிறார். அவ்வுண்மை பழைய தமிழ் இலக்கியத் திறனாய்வுக்குச் சாலவும் பொருந்தும். தொல்பழம் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், தன் காலத்தும் தனக்கு முன்காலத்தும் நிலவிய இலக்கண இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்ந்து கூறிய கருத்துக்களின் தொகுப்பே ஆகும்

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிப்
புலந்தொகுத் தோன்

என்று தொல்காப்பியப் பாயிரத்தில், பனம்பாரனார், தொல்காப்பியரைக் குறிப்பிடுவதால், தொல்காப்பியர் ஒப்பியல் ஆய்வாளர் என்பதும் அவர் கூறும் விதிகளில் பெரும்பாலானவை ஒப்பியல் ஆய்வால் உருவாகியவை என்பதும் அறியத்தக்கன.

★ The history of Criticism has been very largely the history of attempts to formulate rules for Criticism, Chiefly by Comparing the merits of several similar works of literature and the means used to produce them Page 14.
— Principles of Literary Criticism by L Abercrombie.

வழக்கு, செய்யுள் என்று பிரித்து ஆய்ந்தவர் என்பதால், தொல்காப்பியர் இலக்கணி என்பதோடு, இலக்கியத் திறனாய்வாளர் என்பதும் புலப்படும், ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தை மட்டும் ஆராயாமல் தன் காலத்தும் தனக்கு முன்னரும் நிலவிய இலககியங்கள் அனைத்தையும் ஆராய்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

இலக்கியம் மொழிக் கலையாகலின் மொழிக்கு இன்றியமையா எழுத்துக்களை எழுத்ததிகாரத்திலும், சொற்களைச் சொல்லதிகாரத்திலும், இலக்கியமாக்கத்தக்க பொருள்களையும் அவற்றைப் பாடுமுறைகளையும் பொருளதிகாரத்திலும் ஒப்பிட்டு ஆய்ந்து இலக்கியத் திறனாய்வுப் பணியைத் தொல்காப்பியர் செய்துள்ளார்.

அகம், புறம் என்ற பொருள் இலக்கணப் பாகுபாடு அவற்றைப் பாடும் முறையைக் கூறுவதே.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்,

என்று தொல்காப்பியர் கூறும் இலக்கிய விளக்கம், மேல் நாட்டுத் திறனாய்வாளர் பலர் பக்கம் பக்கமாக எழுதி விளக்க முயலும் இலக்கிய விளக்கத்தின் இரத்தினச் சுருக்கமே.

அகப்பாட்டில் "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெருஅர்" என்பதும் அகப்பாட்டில் வருகின்ற கூற்று வகைகளும் புறப் பாட்டிற்கு வரையறுக்கப்பெற்ற திணை துறைகளும் இன்னோ ரன்ன பிறவும் இலக்கியத்தைப் படைப்பதற்குரிய விதிகளே.

தொல்காப்பிய உவமவியலும், யாப்பருங்கலக் காரிகை தண்டியலங்காரம் போன்ற நூல்களும் இலக்கியத்திற்கு இன்றி யமையாத வடிவ ஆராய்ச்சி செய்கின்றன. தொல்காப்பிய மெய்ப் பாட்டியல் இயக்கத்தின் தலைமைக் கூருகிய உணர்ச்சி பற்றி ஆராய்ச்சி செய்கிறது. தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக் கணம் காப்பியக் கொள்கைகளின் தொகுப்பாகும்.

மேற்காட்டிய இலக்கியத் திறனாய்வுக் கருத்துக்கள் எல்லாம் இலக்கண விதிகளின் உருவிற் கூறப்பட்டுள்ளமையின் மேற் போக்காக நோக்குவார்க்கு இலக்கியத் திறனாய்வாகத் தோன்ற வில்லை 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினனே' என்று விதிவிலக்குக் கூறியிருந்தும், திறனாய்வுக் கொள்கைகள் விதிகளாக இருப்பதால். இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளாகத் தோன்றுமல் இலக்கணச் சட்டங்களாகத் தோன்றி நம்மை மயக்குகின்றன

அரங்கேற்றங்களும் முச்சங்கங்களும்

பாண்டியர்கள் காலந்தோறும் கூட்டிய சங்கங்கள் பண்டைய திறனாய்வுக் களங்களாகும். முச்சங்கங்கள் மாபெரும் இலக்கியப் பணிகளைச் செய்திருக்கின்றன. சங்கப் பலகையின் ஒப்புதல் பெற்றே பழைய நாளில் நூல்கள் மக்கள் மன்றத்திற்கு வர முடியும். புதிதாகப் புலவன் ஒருவன் ஒரு நூலை இயற்றினல், சங்கப் பலகை கூடி அந் நூலினை வரிவரியாக ஆராயும். நூலின் பொருள் மட்டுமன்றி அதனை உருவாக்கிப் எழுத்துக்களும் சொற்களும் கூட ஆராயப் பெறும். நூல்கள் மட்டுமன்றி ஒரு

பாட்டுக்கூட ஆராயப்படும். பிழையுடைய நூல் தள்ளப்படும். பிழையற்ற நூலே பாயிரம் என்ற முத்திரை பெற்று மக்கள் மன்றத்திற்கு வரும். எவ்வகையிலும் பிழையற்றது என்று புலவர் மன்றம் முடிவு கட்டிய செவ்விய நூலே தமிழ் இலக்கிய உலகில் வழங்கியதால் பின்னால் வந்தோர் அதனை ஆராய்ந்து குறை சொல்லவில்லை ஆராய்ச்சியெல்லாம் பாராட்டாகவே அமைந்ததற்குச் காரணமும் அதுவே.

தொல்காப்பியம், அதங்கோட்டாசான் என்ற பெரும் புலவர் தலைமையில், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அரங் கேற்றம் பெற்றது என்பதைத் தொல்காப்பியப் பாயிரம் தெரிவிக் கிறது.

நூல்மட்டுமன்றித் தனிப் பாட்டும் ஆராயப் பெற்றது என்ற கருத்தைத் தருமி பொற்கிழி பெற்ற வரலாறு அரண் செய்யும் 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்ற நக்கீரர் கருத்து, காய்தல், உவத்தல் இன்றி இலக்கிய ஆராய்ச்சி நிகழ்ந்ததைத் தெரிவிப்பதாகும். 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற இறையனார் பாட்டில் 'பொருட் குற்றம் உண்டு' என்ற கருத்து, அந்நாளில் இலக்கியம், எழுத்து சொல், பொருள் என்று நுணுகி ஆராயப்பட்டது என்ற உண்மையை அறிவிப்ப தாகும்.

திருக்குறள் எக்குற்றமும் இல்லாத நூலென்று கடைச்சங்கப் புலவரால் முடிவுசெய்யப் பெற்றது என்ற கருத்தும் ஒருமுக மாகப் புலவர்கள் எல்லாம் பாராட்டிப் பாடிய திருவள்ளுவ மாலைச் செய்யுட்களும், ஆகிய இரண்டும் அரங்கேற்றங்களும் சங்கங்களும் செய்த இலக்கியத் திறனாய்வுப் பணியைத் தெளி வுறுத்துகின்றன.

உரையாசிரியர்களின் திறனாய்வுப் பணி

'அகல உழுவதிலும் ஆழ உழுவதே மேல்' என்ற கருத்தைத் தமிழர்கள் இலக்கிய உழவிலும் மேற்கொண்டனர். பிழையற்ற நூல்களே அரங்கேற்றத்தின்மூலம் வெளிவருதல் மரபாதலால் இலக்கியங்களை ஆய்த்த பழந்தமிழ்ப் புலவர்கள் நவின்று நவின்று நூல்களின் நயங்களை மட்டுமே கண்டனர், காட்டினர்.

முதல் நூல் படைப்பவனை, 'வினையின் நீங்கியவன்' என்றும், 'விளங்கிய அறிவினன்' என்றும், 'முனைவன்' என்றும், கருதிய தால், அவனை விளங்கிக்கொள்வதே அறிவென்றும், அவனைக்

குறைகூறுவது கொலையினும் கொடிதென்றும், பின்னாளைய உரையாசிரியர்கள் கருதினர், எனவே, இலக்கியங்களை வியப் பதும் நயப்பதுமே தம் கடமையெனக் கருதினர்- உணர்ச்சி மேலிட்டு வியந்து வியந்து உரையெழுதியதால் அவர்களின் கண்ணுக்கு மூலநூல் ஆசிரியர்களின் குற்றங்கள் புலப்பட வில்லை. உரையாசிரியர்கள் பாராட்டத்தக்க இலக்கியத் திற னாய்வுப் பணி செய்தனர் எனினும், அவர்கள் திறனாய்வு மூல இலக்கியங்களின் படைப்பூக்கியாக விளங்காமல், கருத்துப் பரப்பியாகவே அடங்கிற்று.

இடைக் காலம்

புராணச் சொற்பொழிவாளர்களும், நாலாயிரத்திற்கு உரை கூறிய வைணவ ஈட்டுரையாசிரியர்களும் வியக்கத்தக்க திற னாய்வுப் பணிகளைச் செய்துள்ளனர். செந்நாப் புலவர்களின செய்யுட்களை நோக்கிநோக்கியும், இலக்கியக் கருத்துக்களை வாழ்க்கையோடு ஒப்பிட்டும் அப் பெரியார்கள் செய்த இலக்கியத் திறனாய்வுப் பணி இவ்வையம் பெறும்.

அரசவைகளிலும் விழாக் காலங்களிலும், திருக் கோயில் களிலும் நிகழ்ந்த பட்டி மன்றங்களும் திறனாய்வுப் பணியைத் திறம்படச் செய்துள்ளன

அன்றும் இன்றும்

இன்று இலக்கியத் திறனாய்வு பல்கலைக் கழகப் பாடமாகச் சேர்க்கப் பெற்றுள்ளது, ஆங்கிலம் கற்ற தமிழ்ப் பெருமக்களால் மேலைநாட்டுப் புதிய திறனாய்வு முறைகள் எல்லாம் சொற் பொழிவுகள், நூல்கள், மன்றங்கள் ஆகியவற்றின் வாயிலாகத் தமிழில் புகுந்துவருகின்றன

இலக்கிய விழாக்களில் நிகழும் உரையரங்கங்கள், பட்டி மன்றங்கள், கவியரங்கங்கள், வழக்காடு மன்றங்கள் போன்றவை இலக்கியத் திறனாய்வுப் பணி செய்து வருகின்றன.

வானொலி, திரைப் படம், செய்தித் தாள்கள் முதலிய பொது வாயில்களும் திறனாய்வுப் பணி செய்துவருகின்றன,

வள்ளுவர் போன்ற மேதையரை அரிஸ்டாட்டில், பிளாட்டோ, கன்ஃபூசியஸ் போன்ற மேதைகளோடும்; கம்பன் போன்ற காப்பியக் களிறுகளை, மில்டன் போன்ற மேனாட்டுக் காப்பிய வேந்தர்களோடும் ஒப்பிட்டு ஆய்ந்துவருகின்றனர். தெய்வப் புலவர் என்று தொழப்பெற்ற திருவள்ளுவர் செய்த

குறைகளும் திறனாயப் பெறுகின்றன சுருங்கச் சொன்னால் அறிவியல் காய்ச்சல் பரவிவரும் இந்நாள் முறைக்கேற்ப அனைத்துத் தமிழ் இலக்கியங்களும் அறிவியல் முறையில் ஆராயப் பெறுகின்றன. அத்துறையில் புத்தம்புது கலை நூற்களும் எழுந்து வருகின்றன.

முன்னாள் ஆராய்ச்சி தனித்துறையாக வளரவில்லை; இலக்கியத்திற்கு இலக்கணங்களாக விளங்கியது. குறைகளைச் சுட்டிக் காட்டாத தெய்வீகப் போக்கும் புலவனை ஓரளவு கட்டுப்படுத்தும் இலக்கண விதியமைப்பதும் பழைய இலக்கியத் திறனாய்வின் தலையாய தன்மைகளாம்.

முன்பு, அச்சுப் பொறியின்மையால், இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள் எளிதில் நினைவில் அமைக்கத் தக்க இலக்கண வடிவில் அமைந்தன. கவிதையாற்றல், கருவிலே திருவாக வந்த இறையாற்றல் என்று கருதியமையால், கவிஞர்கள் குறைகளை, ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடவில்லை. குறையற்ற நூலே அரங்கேறி வெளிவருமாதலால், வெளிவந்த நூலகளின் நிறைகளே பறைசாற்றப்பெற்றன. இலக்கணத்தில் நெகிழ்ச்சியிருந்ததால், அந்நாளைப் புலவர்கள் இலக்கண விதிகளைத் தடையாகக் கருதாமல் வழிகாட்டியாகக் கருதினர் மூல் நூல்களை அவரவரும் பயில நிறைய ஓய்விருந்தமையாலும் மூலநூற் கல்வியே கல்வியாகக் கருதப்பெற்றமையாலும் திறனாய்வு நூல்கள் பெருகவில்லை. கல்வி முறை குருகுல முறையாக இருந்ததால் — ஆசானே தெய்வமென்றும், அவன் கருத்தே வேதமென்றும் கருதியதால் — இலக்கியங்களை எதிர்த்து நோக்கும் பார்வைக்குச் செல்வாக்கு மிகுதியாக இல்லை.

காலத்திற்கேற்பத்தான் எக்கருத்தும் உருக்கொள்ளும். அந்நாளை முறைக்கேற்ப இலக்கியத் திறனாய்வு அன்று நிகழ்ந்தது என்றும் தமிழர் கண்ட இலக்கியக் கொள்கைகள், அளக்கலாகா அளவும் பெருமையும், துளக்கலாகா உறுதியும் உடையவை என்றும் அறிவோமாக. பழைய கருத்துக்களைப் புதிய முறைகளில் எழுதினால் ஒப்புயர்வற்ற இலக்கியத் திறனாய்வுக் கலை நூலாக அது மிளிரும் என்பது வெள்ளிடைமலை.

கடவுட் காட்சி

வித்துவான். அ வைத்திலிங்கம், மண்டபம்முகாம் (அஞ்சல்)
இராமநாதபுரம் (மாவட்டம்)

1. பொறிபுலன் அனைத்தும் ஆக்கிப்
புண்ணியா மண்ணின் மீதே
நெறிகெட வைத்தாய் என்னை
நீசனும் யானோ, நீயோ?
குறிபட வல்லேன் அல்லேன்
குணக்குன்றே ஆவா யாகில்,
நெறிபட வைப்பாய் என்னை
நினைவேன் யான் நாளும் நெஞ்சில்!

2. அண்டங்கள் படைத்துக் காத்தே
அளவிலா ஆட்டம் கண்டே
பிண்டங்கள் எம்மை இந்தப்
பிறவியாப் பிறக்கச் செய்த
அண்டர்நா யகனே! தேவா!
அப்பனே! ஒப்பில் லானே!
கண்டதோ தீமை இன்னும்
காண்பதும் அதுவே யாமோ?

3. உலவிடும் நாள்கோள் காண்பேன்;
உன்பெரும் ஆற்றல் காண்பேன்!
நிலவிடும் நிலைகள் காண்பேன்;
நின்செயல் அவைகள் என்பேன்
குலவிடும் உள்ளம் உன்னைக்
குறித்திடும் பொருளாய் ஆனால்,
பலமுறை உன்னைக் காணப்
பயின்றிலேன் என்னே செய்வன்?

4. நீலவான் நினது மேனி;
நிறமெலாம் பகலும் அல்லும்;
கோலமார் மீன்கள் உன்றன்
குவளைக்கண் விழிய ணுக்கள்:
ஞாலமோ உன்றன் ஆற்றல்
நல்கிடும் அணுவே யாகும்:
ஓலமோ ஓமென் ருகும்
உன்மொழி யதுவே யாகும்!

5. கடவுளைக் கண்டேன் என்பார்!
கடவுளைக் காணேன் என்பார்!
கடவுளைக் கண்டேன் என்ருேர்
கயவராம் மனிதர் போலக்
கடவுளாம் உன்னை ஆக்கிக்
கடைநிலை ஆக்கு கின்ருர்!
கடவுளைக் காணேன் என்ருேர்
கண்பொத்தி விண்ணை ஆய்வார்!

கவிதையும் கடவுள் மேமனி. காணுங்கள் நாளும் நாளும்.

மின்மினி.

புதுக்கவிதை புனைவோர்க்கு...

டாக்டர். சொ சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
(அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.)

1. உரைநடையை ஓரிரண்டாய்ப் பிரித்துக்காட்டி
ஓரத்தில் இடம்விட்டு உள்ளப் போக்காய்
கரையற்ற கழுநீராய், வரம்பில் லாத
கன்னியெனக் கவிதையின்று சிலபேர் தீட்ட
நரைகண்ட பெரும்புலவர் தாமும் இங்கே
நவின்றதனைக் கண்டிக்க மாட்டாராகிப்
புரைபட்ட புலமையராய் நின்கின் றாரால்;
போயிற்றோ பழந்தமிழர் வீரம் ஓடி?

2. பாட்டென்றால் செவிப்புலனும் சிறந்து நிற்பப்
பகர்கின்ற நெறிதனிலே கருத்தொன் றேந்திக்
கேட்டிருப்போர் உளம்குளிர நன்மை கூறிக்
கிறக்குவதாம்; உள்ளத்தின் உணர்ச்சி தன்னை
நீட்டுகின்ற சொற்களிலே காணு மாறு
நிலைப்பதுவாம்; கேட்டிருப்போர் நெஞ்சின் ஊடே
தீட்டுவதாம் சொல்லினில் ஓர் ஓவியத்தை:
திறமுறைத்தார் சான்றோரும் அந்த நாளில்.

3. இலக்கணத்தைப் படித்துவிட்டா எழுது கின்றார்?
ஏதோதாம் அனைத்தினுககும் தலைவர் போல
விலக்கரிய பெருமையினர் என்றே எண்ணி
விரைகின்றார் பாட்டெழுத முந்து கின்றார்
துலக்குகின்ற நெறிகாணார்; தூய்மை இல்லார்;
தொல்சான்றோர் எடுத்துரைத்த கருத்தும் காணார்,
புலக்கின்றார் பழையதமிழ் மரபை எல்லாம்
புறக்கணித்தே எழுதுங்கோல் புரட்டு கின்றார்.

4. பத்திரிகை பலவற்றைத் தொடரு கின்றார்
பாங்குறவே தம்எழுத்தைக் கவிதை என்று

முத்திரையும் இடுகின்ருர்; அறிவில்லாத
மூடர்சிலர் இருப்பதனுல் சிந்திக் காமல்
எத்திசையும் பரப்புகின்ருர்; இவற்றைக் கண்டு
இளைஞரினம் தடுமாறி; பழமை என்ற
புத்தமிழ்தைச் சிந்தித்தல் தானு மின்றிப்
புற்றீசல் பெருக்கமெனப் பறந்து நிற்பார்.

5. அடுத்துவரும் காலத்தே வருவோர் தங்கள்
அகவாழ்வுத் திருத்தத்துக் கென்ன செய்தோம்
தொடுத்துவரும் கவலைகளாம் சூழற் பட்டுத்
தொகையாகப் பெருஞ்செல்வம் இழந்து விட்டே
அடுத்துவரும் பேரழிவாம் வெள்ளத் திற்குக்
கணக்கற்ற இரையாகக் கரைந்து போக
விடுத்திட்டால் எதிர்கால விளைவென் ருகும்
விரித்துரைத்தால் பகைவரென வெகுள்வர் யாரும்:

6. பாலுணர்ச்சி என்கின்ற உணர்வைக் காட்டிப்
பாதையிலே தடுமாறும் நெஞ்சத் தோரை,
மேலுறுத்தும் வண்ணங்கள் பலவும் காட்டி
மெலிவிக்கும் தீத்திறத்தைப் பாடு தற்குச்
சாலுமென நாவிதனுல் நவிற்றத் தானும்
சக்தியிலே' சான்ருேர்கள் உரைகேட் டற்கு
மாலுகின்ற சிந்தையினர் வருவ துண்டோ
மணப்பதுண்டோ எங்கேனும் அழுகற் பூக்கள்?

7. வருமானம் ஒன்றைத்தான் கருது கின்ற
வணிகமனம் அறிவுநலம் இணைய லாமா?
பெறுமான மில்லாத நெஞ்சுக் குள்ளே
பேதைமையை இறக்குமதி செய்ய லாமா?
திருமானம் ஒன்றுமிலாக் கூட்டமா நாம்?
தீர்மானம் இல்லாமற் செய்தல் உண்டா?
ஒருமானம் உடையவராய் இருந்து விட்டால்
உதிப்பதெங்கே கயமையெனும் இருளின் மூட்டம்?

8. விளம்பரத்துக் காகவறம் செய்ய வந்து
விதைபோடு கின்றார்பொய் யொழுக்க மேவ!
இளம்பருவப் பயிர்க்குள்ளே வளர்தற் காக
ஏற்றஉரம் போடுகின்றே மென்று கூறி
உளங்கருகும் நஞ்சுதனைத் தூவு வோர்க்கு
உளங்கெடுக்கும் இங்கிவர்க்கும் வேறு பாடு
விளம்புதற்கும் உண்டோதான்? எண்ண எண்ண
விம்மிடும்நம் உளம்பதைக்கும் துடி துடிக்கும்.

9. அறிந்திருந்தே சாய்க்கடையில் விழுவார் போல.
அறிந்திருந்தே பொய்யொழுக்கம் தலைமேற் கொள்வார்
தெரிந்திருந்தே பூநாகம் தன்னைச் சூடும்
தெரிவையரைப் போலிவர்தாம் உய்தல் உண்டோ?
பிரிந்திருந்தே கெடுக்கின்ற பேதை யோர்க்கும்
பித்தேறிப் போனோர்க்கும் கருவி யாகிப்
புரிந்திருந்தும் புரியாதோர் ஆகி நின்ற
போதையிலே மயங்குகின்றார்; வாதை கொண்டார்!

10. கவர்ச்சிக்கே அடிமைசெய்து கால மெல்லாம்
கருத்தழிந்து மெய்யழிந்து சிந்தை கெட்டு
இலர்கின்ற சிந்தையின்றிக் கீழே சென்று
எட்டுணையும் பிறர்மதிப்ப தின்றி வீணே
உவர்நிலத்துப் பூஞ்செடியாய் உருவம் மாறி
ஒருவர்க்கும் பயன்படா தொழிந்து போக
இவர்கள்தமைச் கெடுக்கின்ற உலுத்தர் தம்மை
எங்கெங்கும் கண்டிடலாம் கூர்ந்து நோக்கில்.

11. பொருள்இருக்கக் கடன்வாங்கும் புன்மை இல்லை;
புலமிருக்க உழைப்புக்கே திரிய வேண்டா!
அருள்இருக்க நோய்நினைத்தே அழுதல் வேண்டா;
ஆறிருக்க நீர்தேடி அலைவார் இல்லை!
தெருள்போக்கும் இலக்கணமோ தெளிவாய் நிற்கத்
திசைமாறிப் போகின்ற செயலும் ஏனோ
மருள்போக்கி இலக்கணமாம் நெறியை மேவி
மாண்கவிகள் பாடிடல் இனியும் நன்றாம்.

12. படியாமல், தெளிவில்லை என்று கூறிப்
பாழ்நெறியே போகாமல், இலக்கணத்தைக்
கடியாமல் கல்வியொடு கற்றல் வேண்டும்;
கற்றுவிட்டால் மரபுவழிக் கவிதை பாட
முடியாமல் போய்விடுமோ? உள்ளம் இல்லை
முயற்சிஇல்லை; மெய்வருத்தக் கூலி உண்டு
ஓடியாமற் போயிடுமோ சோம்பல் என்ற
ஒருபாவி! முனைந்திடற்கு மனந்தான் வேண்டும்.

13 தமிழ்மாந்தர் யாப்பென்ற இலக்கணத்தை
தகுதியினால், திறமையினால் பயிலுதற்கே
அமிழ்தாக எளிதாகச் சுவையி னோடு
அமைத்துள்ளார்; தெளிவாக உணர்ந்து விட்டால்
கமழ்கின்ற மரபுநெறி வழுவி டாமல்
கவிதோன்றும்; மனம்போன போக்கில் ஓடி
அமிழ்கின்ற நிலைமாறும்; காலத்துக்கு
அழியாத பாட்டெழுதப் புலமை வாய்க்கும்.

14 புதுக்கவிதை எனும்பெயரில் சிலர்தான் கூறிப்
புதுவலையம் ஒன்றதனைப் போட்டுக்கொண்டு
'இதுக்கெல்லாம் பெயர்கவிதை' என்று கூறி
இரண்டொருசொல் தமையெழுதி மற்ற வெல்லாம்
'இதுக்குள்ளே அடக்கம்' என்பார்; நெல்லுக்குள்ளே
இருக்கின்ற தரிசியெனும் ரகசியந்தான்
உதிக்கின்ற சிந்தனையின் சிற்பி போன்றே;
உரைத்திடவோ நாநாணும்; சொல் தடுக்கும்.

15 பலரிதற்குப் பாராட்டு: காசு பண்ணப்
பத்திரிகை; ஆய்தற்கு வாச கர்கள்
பலரிருக்கும் வட்டங்கள்; சாதீ யத்தைப்
பதுக்கியிவர் பிழைக்கின்றார்: கேள்வி கேட்டால்
உலகமெலாம் முன்னேறல் பார்த்தும் இங்கே
ஓரிருவர் தடுக்கின்றார்; பழம் பஞ்சாங்கம்
திலகமெனப் புதுக்கவிதை தீட்டு கின்றோம்
தீண்டமறுக் கின்றாரென் றோலம் செய்வார்!

16. பார்ப்பவர்கள் உண்மையென எண்ணும் வண்ணம்
பாசாங்கு பண்ணிடுவார். தமிழின் ஊடே
சீர்ப்புதிய மொழிச்சொற்கள் கலத்தல் வேண்டும்;
செந்தமிழ்அப் போதேதான் செழிக்கும் என்பார்;
வேர்ப்பார்கள் உள்ளுக்குள் தமிழிற் குள்ளே
வேற்றுமொழி விரவாமல் எழுது வோரை
தீர்ப்பமென ஒருகூட்டம் கூட்டிக் கொண்டு
தீந்தமிழைத் தனித்தமிழைப் பழித்தல் செய்வார்!

17. பிழைமலிந்த பாட்டாலே ஏட்டி ஞலே
பிற்காலத் தமிழர்க்கு நகை வாராதோ?
பிழைமலிந்த நடையிவர்தான் எழுதிப் பேசப்
பின்னெங்கே கற்ருர்கள் எனச் சிரித்து,
அழைத்தெல்லா ரும்கூடி உரையா டற்கே
ஆரய்யா வழிவகுக்க விடுவார் இங்கே?
தழைக்கின்ற தனித்தமிழில் எதையும் கூறும்
தகுதியுண்டு திறனுண்டு உரமும் உண்டே!

18. ஆதலினுல் புதுக்கவிதை எழுது வோரே!
அறியாமைக் கால்வழியை உருவாக் காதீர்!
ஈதலினுல் சிறந்துயர்ந்த தமிழில் வேறு
இன்னுத சொல்பிணைத்துக் கொலைசெய் யாதீர்!
தீதகற்றும் இலக்கணத்தைப் படித்து விட்டுத்
திருந்திடுவீர், எழிற்கவிதை புனைந் திருப்பீர்!
கோதற்ற புதுக்கவிதை இந்நூற் ருண்டில்
குலவிடிலே வருங்காலம் வாழ்த்தெ டுக்கும்!

19. புதிதாக உவமைகளைப் படைத்தல் செய்வீர்!
பொருளாழ மிகுந்திருக்கும் நடையிற் செல்வீர்!
புதிதாகும் அறிவுலகச் செல்வந் தம்மைப்
புகழ்சேர்க்கத் தமிழுக்குக் கொணர்வீர் நன்றே!
விதியற்ருேர் சிலர்மொழியை வெறுத்தல் செய்வீர்!
வேலியினைப் பேணியிவண் பயிரைக் காப்பீர்!
மதியாலே வாழ்ந்திடுவீர்; பொருளால் அன்று:
மாண்புநெறி தனைமனத்துத் தழுவு வீரே!

திருக்கற்குடி

பேராசிரியர். சி. கோவிந்தராசனர்,
பழம்பொருள், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், கரந்தை.

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

சோழர் காலத்தில் பெருநகராக இருந்த பழையாறை இன்று பெயரளவில் ஒடுங்கி, கும்பகோணத்திற்குத் தென்பால் ஓடும் அரிசிலாற்றுக்குத் தெற்கே மூன்று கல் தொலைவில் ஒரு சிற்றூராக இருக்கின்றது இச்சிற்றூரைச் சார்ந்ததாக, முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்தி முற்றம் சோழ மாளிகை, திருமேற்றளி, கோபிநாத பெருமாள் கோயில், ஆரியப் படையூர், புதுப்படையூர், பம்பைப் படையூர், மணப் படையூர், அரிச்சந்திரபுரம், நந்திவர்மபுரம் (நந்திமேடு) தாராசுரம் ஆகிய சிற்றூர்கள் இன்று இருக்கின்றன. இவை யாவும் அன்று பழையாறையின் பகுதிகளாக இருந்தன. பழையாறைப் பெருநகர் கீழைப் பழையாறை, மேலைப் பழையாறை என இருபிரிவாக பிரிக்கப்பட்டிருந்தது "கீழைப் பழையாறையாகிய இராசராசபுரம்" என்று திருச்சத்தி முற்றத்துக் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. இராசராசபுரம் என்ற பெயரே இப்பொழுது தாராசுரம் என்று திரிந்த பெயராய் வழக்கிலுள்ளது இவ்வூரைச் சார்ந்ததாகும் நந்திவர்மபுரம், திருச்சத்தி முற்றம் ஆகிய பகுதிகளே கீழைப் பழையாறை என்ற அளவில் குறிக்கப்பட்டன எனலாம்.

சோழ மாளிகை

திருச்சத்தி முற்றத்திற்கு வடபால் உள்ள சிற்றூரே சோழ மாளிகை என்பதாகும். இது 'ஆயிரத்தளி அரண்மனை என்றும் பெயர் பெறும் இவ்வூரில் இன்று சோழர் காலத்து மாளிகையின் சிறு பகுதிகூட காட்சிக்கு இல்லை. ஆயினும், இவ்வூரின் மேற்குப் பகுதியிலுள்ள பெரியகுளத்தினைச் சூழ்ந்ததாகவும், புன்செய் நிலமாகவும் திருத்தப்பட்டிருக்கும் பெரும் பரப்பிடமே வரலாற்றுச் சிறப்புடைய சோழரது மாளிகை இருந்த இடமாகும். நிலத்தை அகழுங்கால் ஆங்காங்கே பழைய சுவர்களும், கிணறுகளும் இருப்பதை அப்பகுதியிலுள்ள மக்கள் நேரில் கண்டுள்ளனர் மற்றும் அங்குள்ள பெருங் குளமே, சோழ மாளிகையின் முன்புறம் அன்று சிறப்புடனிருந்த

திருக்குளமாகும். இக்குளத்தின் மேற்குக் கரையில், முதுமையான மரங்களுடன் இருக்கும் தோப்புப் பகுதி மாளிகையின் கிழக்கு வாயில்களுள் ஒன்றிருந்த பகுதியாகுமென்பதை அங்கு நிலத்தினுள் புதைந்து கிடக்கும் சுவர்ப் பகுதிகளைக்கொண்டு அறியமுடிகின்றது.

இவ்வாறு சோழ மாளிகை முற்றிலும் அழிவுற்று மண்மேடாகக் கிடப்பதற்குரிய காரணத்தினைச் சென்ற கால வரலாறு தெளிவுசெய்கின்றது கி பி. 1219-ல் சோழநாட்டை அழிவு செய்வதென்னும் குறிப்புடன் படையெடுத்துவந்த முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பழையாறையிலிருந்த சோழரது மாளிகைக்குரிய மாடம், கூடம், ஆடலரங்கு, மண்டபம் ஆகிய பகுதிகளை இடித்துப் பாழாக்கியுள்ளா னென்பதை அவனது மெய்க்கீர்த்தி தெளிவாக உரைக்கின்றது எனவே பழையாறையின் ஒரு பகுதியாக இருந்த சோழரது பழம் பெரும் மாளிகை கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் பகைவரால் இடிக்கப்பட்டு பாழடைந்தது எனவாகும். எஞ்சி நின்ற மாளிகைப் பகுதிகள் மக்களின் பேராசைக்கும் முகம்மதியரின் விருப்பத்திற்கும் இலக்காகி சிதைந்து மண்ணுள் மறைந்து போயின.

இராசேந்திர சோழன் பழையாறை மாளிகையுள் ஆலக்கோயிலில் உணவருந்தியபின் அறஞ்செய்ததாக கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது. அரசன் அறஞ்செய்யும் நாளில், உணவருந்தி மன நிறைவுடன் இருந்து, தான் விருப்பிய நல்லறங்களைச் செய்தல் அக்கால அரச முறைமைகளுள் ஒன்ருக இருந்ததென்பதனை இச்செய்தி புலப்படுத்துகின்றது.

திருப்பதியம் பாடுவார்க்கு - நிவந்தம்

திருப்பதியம் என்பது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய சைவ சமயாச்சாரியர்கள் மூவரும் சிவத்தலங்கள் தோறும் சென்று அங்குள்ள இறைவன்மீது பாடிய இசைப் பாடல்களாகும். பத்துப் பாடல்களாகப் பாடப்பட்டதால் பதிகம் எனக் குறிப்புப் பெயர் பெற்றது. பதிகம் என்பதையே கல்வெட்டில் பதியம் என்று கூறப்பட்டுளது.

திருக்கற்குடி விழுமிய தேவர்க்கு நாள்தோறும் திரும்பதியம் பாடுவார்க்குரிய நிபந்தமாக. "திருக்கற்குடியைச் சார்ந்த கற்பிரமதேயத்திற்குரிய பிடாகை. சீகரண நல்லூரில், மழை

ஊரின் வளர்ச்சிப் பகுதி பிடாகை யெனப்படும்

நீரால் நிரம்பும் இயல்புடன் இருந்த குளத்தின்கீழ், அக்குளத்து நீர் பாய்ந்து, ஒருபோகம் விளையும் நன்செய்யும், புன்செய்யுமாக இருந்த நிலங்களில் ஆண்டு வருவாயாக வந்த 1121 கலன் நெல்லை. ஓராண்டுக்குரிய திருப்பதிய நிபந்தமாக வரியிலிட்டுக் கொள்க'' என்று ஆணை பிறப்பித்துள்ளான்

இராசேந்திரன், தன் தந்தை இராசராசன் தஞ்சை இராசராசேச்சரத்தில் திருப்பதிய விண்ணப்பம் செய்ய 48 பிடாரர்களுடன் (ஓதுவார்கள்) உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிப்பார் இருவர் ஆக ஐம்பதின்மருக்கு நாள்தோறும் நிபந்தமாக நெல் வழங்கியதைப் போலவே, தானும் திருக்கற்குடி இறைவன் திருமுன்னர் திருப்பதியம் பாட ஆளிட்டு அவர்கட்கு நிபந்தமாக நெல் வழங்கியுள்ளமையை இக் கல்வெட்டுச் செய்தியால் உணரலாகும்.

கல் – மலையானது

கற்குடி என்று வழங்கி வந்த பெயர், 'உய்யக்கொண்டான் மலை' என்றாகியுளது இயற்கையின் உண்மை நிலையினைக் கொண்டு கல் என்று குறிக்கப்பட்டது பொருத்தமுடையதாக அமைந்திருக்க, கல்லை மலையென்று பெயரிட்டு அழைத்தது எவ்வாற்றான் பொருந்துமென்று ஆராயலாகும்.

தரை மட்டத்திற்கு மேலாகப் புடைப்பிட்டு நிற்கும் பெரும் பாறையினைக் கல்லென்றே குறிப்பது வழக்காகும். அத்தகைய பாறைகளின்மீது கோயில்கள் அமைக்கப்பெற்ற நிலையினும் கல்லென்ற இயற்பெயர் மாறவில்லை இதனைக் கோயிலோடு கூடிய பாறைகளான 'நாமக்கல்' 'திண்டுக்கல்' என்ற பெயர்களால் அறியலாகும். இவற்றினும் மிகச் சிறிய வடிவில் ஐம்பதடி அளவில் உயர்ந்துள்ள கற்குடிப் பாறைமீது கோயில் அமைத்திருப்பதை மலை என்று குறித்துள்ளனர் குடந்தைக்கு மேற்கே காவிரியின் வடகரையில் அமைந்துள்ள முருகன் கோயில, கற்பாறைகளால் சுவரெழுப்பி, தளத்தின்மேல் தளமாக உயர்த்திக் கட்டப்பட்ட செயற்கை உயர்நிலைக் கட்டுக் கோயிலாகும். இதனைச் ''சுவாமிமலை'' என்று பெயரிட்டுள்ளனர். இவற்றையெல்லாம் கொண்டு சிந்திக்கின், உயர்த்தப்பட்ட தளத்தின்மீது அமைக்கப்பட்டதாயினும், உயர்ந்துள்ள இயற்

கைப் பாறைமீது அமைக்கப்பட்டதாயினும், இறையகம் அதன் மேல் இருப்பதாயின் அதனை மலையென்று மாண்புடன் சிறப்பித்துக் கூறும் வழக்கு முற்காலத்தில் இருந்த தென்பது போதரும்.

கல்வெட்டில்

இவ்வகையிலேயே கற்குடிப் பெரும் பாறை, இறையகம் அமைந்த சிறப்பினால் மலையெனக் கூறப்பட்டிருக்க வேண்டும். கற்குடிக் கல்வெட்டுகளில் ஒன்று, கற்குடிப் பாறையில் கோயிலமைத்துள்ள இடத்தை மலையென்றும், அதன் தொடர்பாகப் பரவியுள்ளதைப் பாறை யென்றும் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு முதல் இராசேந்திர சோழனுடைய ஆட்சியாண்டு மூன்றில் (கி. பி. 1015) தோன்றியதாகும்.

" ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பர்மரான ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்றுவது, நாள் அறுபத்தொன்றினால் "

கற்பிரமதேயம்

இராசேந்திரன், பழையாற்றுக் கோயிலினுள் ஆலமாளிகையிலிருந்தபோது, கற்குடி மகாதேவர் விழுமியாருக்குரிய நெல் வருவாயாக நிலங்களைத் தேவதானம் செய்ய விரும்பினான். அவ்வாறே கற்குடியாகிய ஊரின் பரப்பினை அளக்க ஆணையிட்டுள்ளான், கற்குடி ஊரின் ஒரு சில பகுதிகள் முன்னர் பிரமதேயமாக அந்தணர்கட்கு வழங்கப்பட்டிருந்தது 'அப்பகுதி 'கற்பிரமதேயம்' எனப் பெயர் பெறும். நிலமளந்து கூறு செய்யும் அதிகாரிகள் முதற்கண் கற்பிரமதேய நிலங்களை அளந்தனர்.

" உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவர் பழையாற்றுக் கோயிலினுள் ஆலமாளிகையின் தென்பக்கத்துக் கூடத்துத் திருவமுது செய்தருளாவிருந்து, கேரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்துக் கற்பிரமதேயம் அளந்தபடி நிலத்தில் "

என்பது கல்வெட்டுப் பகுதி

— தொடரும்.

பழமொழியும் கம்பராமாயணமும்

பேராசிரியர். வ பெருமாள்,
எம். ஏ., பி டி., எம். ஆர் ஏ எஸ்,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்,
முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல்,
மைசூர் மாநிலம்,

தமிழ் மொழி பல்லாயிரம் பழமொழிகளைப் பெற்றிருக்கின்ற உயர்தனிச் செம்மொழியாகும். அணுமுதல் அண்டம் ஈருக வுள்ள ஒவ்வொன்றைப் பற்றியும் தமிழில் எத்தனையோ பழமொழிகள் உண்டு. இப்பழமொழிகள் யாவும் பழுத்த பட்டறிவின் (அனுபவத்தின்) அடிப்படையில் தோன்றிய அறவுரையாகவும் சிந்தனையின் திரண்ட சாரமாகவும் விளங்கி மக்களுக்கு எப்போதும் மெய்யறிவு கொளுத்திய வண்ணம் இருக்கின்றன.

பழமொழியின் வரையறை :

கி. மு 7 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தொல்காப்பியர் பழமொழிக்கு மிகச் சிறந்த முறையில் வரையறை வகுத்துள்ளார். நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய நான்கு இலக்கணமும் வாய்க்கப்பெற்று ஒரு குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்த வல்லது பழமொழி என்பது தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த வரையறையாகும்.

" நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப "
— தொல்காப்பியம் : பொருளதிகாரம்.

தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த வரையறையே நமக்குக் கிடைத்த பழைய வரையறையாகும். பிற நாட்டறிஞர்கள் பழமொழிக்கு வகுத்த சில குறிப்பிடத்தக்க வரையறைகளும் இவண் சிந்திக்கத் தக்கன. ஸ்பெயின் நாட்டு அறிஞர் செர்வாண்டீஸ் (Cervantes) ‘பழமொழி என்பது நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த சிறு வாக்கியம்’, என்று

வரையறை வகுத்துள்ளார். (A proverb is a short sentence based on long experience). 'பழமொழி பலருடைய அறிவு ஒருவருடைய சாதுரியம்'. என்று ஜான்ரஸ்ஸல் (Lord John Russed) வரையறுத்துள்ளார். (The wisdom of many and the wit of one) 'கருத்து, சுருக்கம், கூர்மை முதலிய கூறு களைக் கொண்டதே நல்ல பழமொழி' என்று டிரையன் எட்வர்ட்ஸ் (Tryon Edwards) கூறியுள்ளார். (Sense, brevity and point are the elements of a good proverb) அறிவின் சாரமே பழமொழி என்று வரையறுத்தார் ஜோபர்ட் (Joubert). Proverbs may be said to be thc abridgements of wisdom,.

பழமொழி நாட்டு மக்கள் அனைவர்க்கும் உரிய பொது இலக்கியமாகும். ஒரு நாட்டின் வரலாறு பண்பாடு, நாகரீகம் சமயம், கலை, அறிவு, பழக்க வழக்கம் முதலிய எல்லாவற்றை யும் உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெளிவாக உணர்த்தக் கூடிய ஒரே இலக்கியம் பழமொழியாகும். திறவுகோலைக் கொண்டு பணப் பெட்டியைத் திறப்பது போலப் பழமொழி யைக் கொண்டு ஒரு நாட்டின பண்பாட்டுப் பெட்டகத்தைத் திறந்துவிடலாம் தமிழ்ப் பழமொழி தமிழகத்தைப் பிரதிபலிக் கின்ற கண்ணாடி போன்று அமைந்திருக்கின்றது. தமிழ்ப் பழமொழி துணைக்கொண்டு கம்பராமாயணத்தை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்

கம்பர்

கல்வியில் கரைகண்டவர் கம்பர். கல்வியைப்பற்றி அவர் பாடிய பாடல்கள் மிகப்பல. ஒவ்வொருவரும் கல்வியிற் சிறந்தவ ராகத் திகழ்தல் வேண்டும் என்பதே கம்பர் விருப்பம் அதுவே அவர் கனவு. அவர் கண்ட கோசல நாட்டில் மகளிர் கல்வியில் மேம்பட்டு விளங்கினர்கள் என்பதை அவர் பாடல் வாயிலாக அறியலாம்.

"பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே."

கம்பர் கண்ட நாட்டில் வாழ்ந்த மக்கள் அறிஞர் அறி வற்றவர் என்னும் வேறுபாடு இல்லாமல் அனைவரும் செல்வத் துள் செல்வமாகிய செவிச்செல்வத்தில் சிறந்து விளங்கினர்கள். 'ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்' என்பதும், 'மருந்

தினும் இனிய கேள்வி செவியுற மாந்துவாரும்' என்பதும் கம்பர் வாக்கு. கல்வி வல்லார், கல்வியற்ருர் என்னும் பாகுபாடின்றி மக்கள் எல்லோரும் கல்வியிற் சிறந்தும் மேம்பட்டும் விளங்கினுர்கள்.

"கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை அவைவல்லர் அல் லாரும் இல்லை"

என்பது கம்பர் பாடல். கம்பர் கல்வித் துறையில் நுண்மாண் நுழைபுலம் பெற்றவராகத் திகழ்ந்ததாலும், கல்வியைப்பற்றிப் பல இனிய பாடல்களை மிகச் சுவையான முறையில் பாடியிருத்தலாலும் 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்று மக்கள் போற்றுவாராயினர். அதுவே பழமொழியாக நிலைத்துவிட்டது இவ்வுண்மையை உணர்ந்தே கல்வியையும் கம்பரையும் இணைத்துக்

''கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு''

என்று பாரதியார் தெளிவாகப் பாடியுள்ளார்.

கம்பர் கவிதை இயற்றுவதில் வல்லவர். அவர் யாத்த கவிதைகள் பண்பிலுைம் எண்ணிக்கையாலும் உயர்ந்து விளங்குகின்றன.

''புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்ருகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ெறுழுக்கமும் தழுவிச் சான்ருேர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்''

என்று கம்பர் கவிதைக்கு வரையறுத்த சீரிய இலக்கணத்திற்கு ஏற்ப அவர் கவிதைகள் அமைந்திருக்கின்றன. கம்பர் கவிதையைச் சுவைத்த மக்களிடையே,

'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்', 'கம்பர் வீட்டுள் ஒரு புன் கட்டுத் தறியும் கவி செய்யும்'. 'கவிச் சக்கரவர்த்தி கம்பர்', 'கம்பரிடம் பெருமை உண்டு' முதலிய பழமொழிகள் தோன்றின. 'கம்பர் ஆயிரம் பொன் கொடுத்தால்தான் பாடுவார்' என்றும், 'கம்பரது ஒவ்வொரு பாடலும் ஆயிரம் பொன் பெறும்' என்றும் செவி வழிச் செய்தி வழங்கி வருகின்றது. 'கம்பர் பொன்னுக்குப் பாடி', 'காசுக்குக் கம்பர்' என்பவை பழமொழிகள். கம்பர் கவிதையைக் கேட்கும் தோறும், படிக்கும்

தோறும் கற்றோர் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிடும். இவ்வுண்மையை உணர்த்தக் கீழ்க்கண்ட பாடல் ஒன்றே சாலும்

''இம்பர் நாட்டில் செல்வமெல்லாம் எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா ஓங்கி நிழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத் திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதை யிற்போர் கற்றோர்க்கு இதயம் களியாதே.''

திருமணம் செல்வக் கேசவராய முதலியார் 'தமிழிற்குக் கதியாவார்' இருவர். ககரத்தைக் கம்பராகவும் திகரத்தைத் திருவள்ளுவராகவும் கொள்ளுக' என்று எழுதியுள்ளார். சந்த நயம் தோன்ற விருத்தப்பா பாடுவதில் கம்பர் தலையாயவர் இவ்வுண்மையை உணர்த்தவே 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்'. ஒண்பா என்னும் உயர் விருத்தத்தில் கம்பன்' என்னும் பழமொழிகள் தோன்றின. கம்பர் கவிதை ஒவ்வொன்றும் வெறும் செய்யுளாக மட்டும் அமையாமல் எழுத்தோவியமாகத் திகழ்வதால் அதைக் 'கம்பசித்திரம்' என்று மக்கள் புகழ்வாராயினர். அப் புகழுரையே பழமொழியாகிவிட்டது சில சொற்களில் பல கருத்துக்களை அடக்கித் திட்பமாகவும் நுட்பமாகவும் அமையச்செய்து பளிங்குபோல் விளக்கும் திறனைக் கம்பர் பெற்றிருந்ததால் அவர் கவிதையைக் 'கம்ப சூத்திரம்' என்று மக்கள் பாராட்டினார்கள் அப்பாராட்டுரையே பழமொழியாகக் காட்சியளிக்கின்றது அப்பழமொழிகள் யாவும் கம்பரின் அருமை பெருமையை உணர்த்தியவண்ணம் இருக்கின்றன

கம்பராமாயணத்தின் தொன்மை :

கம்பர் தமிழில் இராமாயணம் எழுதுவதற்கு முன்னரே இராமாயணத்தைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சான்று உண்டு கம்பர் கி பி. ஒன்பதாம் நூற்றுண்டில் பிறந்தவர் கி. மு முதல் நூற்றுண்டில் வாழ்ந்த சங்கப் புலவர் ஊன் பொதி பசுங்குடையார் தாம் இயற்றிய பாடலில் (புறநானூறு 378) இராமாயண நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார் கிணைப் பொருநன் ஒருவன் தன் சுற்றத்தாருடன் ஒரு வள்ளலை அணுகினன். அவ்வள்ளல் பல்வேறு ஒண்கலன்களை அவர்களுக்கு வழங்கினன். இராவணன் எடுத்துச்சென்ற சீதை தான் சென்ற வழியை இராமன் அறியும்பொருட்டுக் கீழே போட்ட அணிகலன்களைக் குரங்குகள் எடுத்து விரலில் அணிய வேண்டிய மோதிரத்தைக் காதிலும் காதில் அணியவேண்டிய குழையை விரலிலும். இடையில் அணியவேண்டிய மேகலையைக் கழுத்திலும், கழுத்தில் அணியத்தக்க மாலையை இடையிலும்

அணிந்துகொண்டதைப்போலக் கிணைப் பொருநன் சுற்றத்தார் வள்ளல் வழங்கிய அணிகலன்களை முறை தவறி அணிந்து கொண்டார்கள் என்று ஊன்பொதி பசுங்குடையார் குறிப்பிட்டுள்ளார். இராமாயண நிகழ்ச்சியை அவர் உவமையாகக் காட்டியதிலிருந்து அவர் காலத்தில் பொதுமக்கள் இராமாயணத்தை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை அறியலாம். கி. பி இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் இராமாயணத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கோவலன் இல்லாத பூம்புகார்நகரம் இராமன் இல்லாத அயோத்திபோல இருந்தது என்று கௌசிகன் வாயிலாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்'
— சிலம்பு: மதுரைக் காண்டம்:
புறஞ் சேரியிறுத்த காதை: 63—65.

இராமன் தன் தந்தையின் ஏவலால் தன் மனைவி சீதையுடன் காட்டிற்குச் சென்று சீதையைக் காட்டில் பிரிந்து வாடினன். இது அனைவரும் அறிந்ததே என்று இளங்கோவடிகள் கவுந்தி அடிகள் கூற்றுகக் கோவலனுக்குச் கூறுவது போலக் கூறியுள்ளார்.

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி அன்றே."
—சிலம்பு மதுரைக் காண்டம்
ஊர்காண் காதை 46—49.

இராமன் காட்டிற்குச் சென்றதும். அங்கு அவன் சீதையைப் பறிகொடுத்து வருந்தியதும் நாடறிந்த செய்தி என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பதால் அவர் காலத்தில் இராமாயணம் தமிழக மக்களுக்கு நன்கு தெரிந்திருந்தது என்பது உறுதி தேவர் அசுரர் போர் பதினெட்டு ஆண்டும், இராமன் இராவணன் போர் பதினெட்டுத் திங்களும், பாண்டவர் துரியோதனன் போர் பதினெட்டு நாளும், செங்குட்டுவன் கனகவிசயன் போர் பதினெட்டு நாழிகையும் நடந்தன என்று

இளங்கோ அடிகள் குறித்துள்ளார். (சிலப்பதிகாரம்: வஞ்சிக் காண்டம்; நீர்ப்படைக் காதை 8—10) இச்சான்றுகள் யாவும் இராமாயணத்தின் தொன்மையைத் தெளிவுபடுத்தி உறுதிப் படுத்துகின்றன.

இராமாயணத்தைப் பற்றிய பழமொழிகள்

இராமாயணக் கதாகாலட்சேபம் தொன்றுதொட்டு நம் நாட்டில் நடந்துவருகின்றது. பாமர மக்களிடையே பக்தியை ஊட்டுவதற்காகவும் நல்லறிவைக் கொளுத்துவதற்காகவும் இராமாயணக் கதாகாலட்சேபம் இரவு முழுதும் நடைபெறுவதுண்டு. பாமர மக்கள் பேரார்வத்துடனும் பக்தியுடனும் கூட்டம் கூட்டமாகச் சென்று இராமாயணக் கதாகாலட்சேபத்தை ஆர்வத்துடன் கேட்பார்கள்.

ஒருவன் இராமாயணக் கதாகாலட்சேபத்தைக் கேட்கச் சென்றான். இரவு முழுதும் கேட்டான். மறுநாள் அவன் நண்பன் அவனை (கதாகாலட்சேம் கேட்டவனை) நோக்கிச் சீதைக்கு இராமன் என்ன முறை வேண்டும்? என்று வினவினான். சித்தப்பா என்று விடையளித்தான் கதாகாலட்சேபம் கேட்டவன். இவ்வுரையாடலை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தவன் 'விடிய விடிய இராமாயணம் கேட்டுச் சீதைக்கு இராமன் சித்தப்பா என்றான்'. என்று குறிப்பிட்டான். அதுவே பழமொழியாகிவிட்டது. யாராவது கவனக் குறைவினால் சரியாகவும், முழுமையாகவும் ஒன்றைச் செவிமடுக்காமல் அரைகுறையாகக் கேட்டுவிட்டுத் தப்பும் தவறுமாகப் பேசினாலோ மறுமொழி உரைத்தாலோ அச் சூழ்நிலையில் இப்பழமொழியைச் சொல்வதுண்டு.

ஒருவன் இராமாயணக் கதை கேட்கப் பாய்தலையணையுடன் சென்றான். இராமாயணக் கதை தொடங்கியவுடன் அவனுக்குத் தூக்கம் வந்துவிட்டது. குறட்டை விட்டுக்கொண்டே தூங்கினான். அருகிலிருந்தவன் இவன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான். பொழுது விடிந்தது, கதையும் முடிந்தது. உட்கார்ந்திருந்தவனும் எழுந்தான்; உறங்கினவனும் எழுந்தான். உறங்கினவன் தான் கொண்டு வந்த பாய் தலையணையுடன் வீட்டிற்குச் சென்றான். அவன் மனைவி அவனை நோக்கி இராமாயணம் எப்படி இருந்தது என்று ஆவலுடன் கேட்டாள். உடனே அவன் 'ஒரு ஆள் சுமை இருந்தது' என்று விடையளித்தான். இராமணக் கதையைக் கேட்கச் சென்று உறங்கி

னவன் இராமாயணத்தைக் கேட்டு அறிந்து கொள்ளவில்லை. அதற்கு மாருகக் தன் மீது அமர்ந்த ஆளின் பளுவைத்தான் அறிந்து உணர்ந்தான். அவனுக்கும் அவன் மனைவிக்கும் நடைபெற்ற உரையாடலே ஓர் பழமொழியாகிவிட்டது. இதோ அப்பழமொழி. 'இராமாயணம் எப்படி இருந்தது ஒரு ஆள் சுமை இருந்தது.

இராமாயணம் மிக நீண்ட வரலாற்றுக் கதை. ஒவ்வொரு கட்டத்திலும் துயரமிக்க போரும் போராட்டமும் நிறைத்திருக்கின்றன. தாடகை வதைப் படலம், பரசுராமப் படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கைகேசி சூழ்வினைப் படலம், நகர் நீங்கு படலம் குகப் படலம், கிளைகண்டு நீங்கு படலம். விராதன் வதைப் படலம், கரன் வதைப் படலம், சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம், மாரீசன் வதைப் படலம், சடாயு உயிர் நீத்த படலம், கவந்தன் வதைப் படலம், வாலி வதைப் படலம் பொழிலிறுத்த படலம், கிங்கரர் வதைப் படலம், சம்பு மாலி வதைப் படலம், பஞ்ச சேனுதிபதிகள் வதைப் படலம் அக்க குமாரன் வதைப் படலம், பாசப் படலம், பிணி விடு படலம், இலங்கை எரியூட்டுப் படலம் முதலிய படலங்கள் மனப் போராட்டமும் புறப் போராட்டமுமாக இருக்கின்றன. யுத்த காண்டம் முழுவதும் இராமன் — இராவணன் போரையே மையமாகக் கொண்டு இலங்குகின்றது. சுருங்கக் கூறுமிடத்து இராமாயணத்தைப் போராட்டக் காப்பியம் என்று கூறலாம். எந்தச் செயலாவது மிக நீண்டதாகவும், கடுமையான போராட்டம் நிறைந்ததாகவும் இருந்தால் 'இதென்ன பெரிய இராமாயணமாயிருக்கு' என்று சொல்வதுண்டு, பாமர மக்களிடையே பெரு வழக்கில் உள்ள இவ்வாய்மொழி பழமொழியாக விளங்குகின்றது

இராமன் திருமாலின் திருவவதாரம். திருமாலுக்கு மறு பெயர் பெருமாள். இராமனைப் பெருமாள் என்றும், இலக்குவனை இளைய பெருமாள் என்றும் குறிப்பிடுவது மரபு. இராமாயணத்தைப் படிப்பவன் இராமாயண நீதிகளுக்கும் குறிக்கோளுக்கும் முரணுகச் செயல்பட்டால் 'படிக்கிறது இராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோயில்' என்னும் பழமொழியைச் சொல்வதுண்டு. இதே பொருளில் 'படிக்கிறது திருவாய்மொழி இடிக்கிறது பெருமாள் கோயில்' என்றும் சொல்வது மரபு. இக்கருத்தை உணர்த்தச் சைவர்கள், 'படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் கோயில்' என்று சொல்லுவார்கள்.

'இராமக் கோனன் மனைவியை இராவணக் கோனன் கொண்டு போனன். இராமக் கோனன் அடித்துப் பிடித்துத் திரும்பக் கொண்டுவந்தான்', என்று இராமாயண வரலாற்றை வேடிக்கையாக இரண்டே வாக்கியத்தில் அடக்கிச் சொல்வதுண்டு. இவ் வேடிக்கை மொழி பழமொழிபோலவே அமைந்து விட்டது. 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனன்' என்ற பழமொழியும் இதையொட்டியே எழுந்தது,

இராமன்

இராமாயணக் காப்பியத் தலைவனாகிய இராமன் தன்னேர் இல்லாத தலைவனாகத் திகழ்கின்றான். கம்பர், இராமனை வெறுங் காப்பியத் தலைவனாக மட்டும் கொள்ளாமல் திருமால் திருவவதாரமாகப் போற்றிப் பாடியுள்ளார். இவ்வுண்மையை நிறுவக் கம்பராமாயணத்தில் அங்கிங்கு எனாதபடி எங்கும் சான்றுகள் மலிந்து கிடக்கின்றன. கம்பர் தம் இராமாயணத்திற்கு இட்ட பெயர் 'இராமாவதாரம்' என்பது இவண் சிந்திக்கத்தக்கது.

இராமனது பல்வேறு உயர் பண்புகளை இராமாயணம் எடுத்துரைப்பதுபோலப் பழமொழிகளும் எடுத்துரைக்கின்றன. அயோத்தி அனைத்து நலன்களும் வாய்க்கப்பெற்ற சிறந்த நகரம். அயோத்தியில் உள்ள அனைத்துச் செல்வங்களையும் விட இராமனையே பெறற்கரும் பெருஞ் செல்வமாக அயோத்தி மக்கள் போற்றினர்கள் இராமன் அயோத்தியை விட்டுக் காட்டுக்குச் செல்லவிருக்கிறான் என்பதைக் கேட்டவுடன் மக்கள் அனைவரும் அழுதனர்; விலங்கு, பறவை முதலிய உயிரினங்கள் எல்லாம் அழுதன.

'கிள்ளையொடு பூவை அழுத கிளர்மாடத்து
உள்ளுறையும் பூசை அழுத உணர்வறியாப்
பிள்ளை அழுத பெரியோரை என்சொல்ல
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்''

''ஆவும் அழுதஅதன் கன்றழுத அன்றலர்ந்த
பூவும் அழுதபுனல் புள்அழுத கள்ஒழுகும்
காவும் அழுத களிறழுத கால்வயப்போர்
மாவும் அழுதனஅம் மன்னவனை மானவே.''

—அயோத்தியா காண்டம் - நகர் நீங்கு படலம்.

இராமன் இல்லாத அயோத்தி பொலிவிழந்து வெறிச்சென்று இருந்ததையும். இராமன் எங்கிருக்கின்றானே அதுவே அயோத்தி என்பதையும் மக்கள் உணர்ந்தனர். அவ்வுணர்வின் ஆழத்திலிருந்து தோன்றியவை பின்வரும் பழமொழிகள் .

'இராமன் இல்லாத அயோத்தி போல'
'இராமன் இருக்குமிடம் அயோத்தி'.

கௌதம முனிவரின் சாபத்தால் அகலிகை கல்லானாள். இராமன் திருவடி பட்டதும் கல்லாக இருந்த அகலிகை உயிர் பெற்று எழுந்தாள். 'பகவான் பாதம் பட்டால் பாருங்கல்லும் பெண்ணாகாதா?' என்னும் பழமொழி இதை அறிவிக்கின்றது. 'கைவண்ணம் அங்குக் கண்டேன், கால்வண்ணம் இங்குக் கண்டேன்' என்பது கம்பர் வாக்கு

காட்டில் முனிவர்கள் யாகம் செய்தனர். முனிவர்களுக்கும் யாகத்திற்கும் சிறு தீங்கும் நேராதவாறு இராமன் கண்ணும் கருத்துமாகக் காவல் புரிந்தான். ஒரு பொருளை மிகப் பத்திர மாகப் பாதுகாத்தல் வேண்டும் என்று யாருக்காவது அறவுரை கூறுமிடத்து 'இராமன் யாகம் காத்ததுபோலக் காக்கவேண்டும்' என்னும் பழமொழியாகச் சொல்வதுண்டு.

இராமன் பேராற்றல் படைத்தவன. அவன் வில்லுக்கும் (கோதண்டம்). அம்புக்கும் (பாணம்) நிகராக உலகத்தில் ஒன்றுமே இல்லை 'கோதண்டத்திற்கு எதிர்தண்டம் உண்டா? இராமபாணத்திற்கு எதிர்பாணம் உண்டா?' என்பவை பழமொழிகள். 'குறிக்குத் தப்பா இராமசரம் என்பது மற்றொரு பழமொழி. இப்பழமொழி குருவிக்குத் தக்க இராமேசுவரம் என்று தவறாக வழங்கப்பட்டு வருகின்றது ஊர்க்குருவி மேல் இராமபாணம் தொடுப்பதா? சிட்டுக்குருவி மேல் இராம பாணம் தொடுக்கலாமா? போன்ற பழமொழிகள் இராம பாணத்தின் மேன்மையைப் பறை சாற்றுகின்றன. இராமன் தாடகைமேல் எய்த அம்பு எவ்வளவு விரைவாகச் சென்று வெளி வந்தது ன்பதைக் கம்பர் பின்வரும் பாடலில் மிக இனிமையாகப் பாடுகின்றார்.

"சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக்குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் நன்றே.
— பாலகாண்டம் தாடகை வதைப் படலம்.

இராமன் தலை சிறந்த வில் வீரன் என்பதை நிறுவ இப்பாடல் ஒன்றே போதும். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது இராமன் ஆற்றலை உணர்த்த எழுந்த தலை சிறந்த பழமொழி.

— தொடரும்.

நக்கீரர் கழகம் :

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி
(1944)
"கல்வெட்டியல்"
தொடர் சொற்பொழிவுகள்

அன்புடையீர்,

வணக்கம். திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரிச் சார்பில் **"கல்வெட்டியல்"** தொடர் சொற்பொழிவுகளை உயர்திரு. **நடன காசிநாதன்**, எம். ஏ, (கல்வெட்டியல் ஆய்வாளர், தமிழ்நாடு அரசு) அவர்கள் நிகழ்த்தி வருகிறார்கள்.

"கல்வெட்டியல்" நான்காவது சொற்பொழிவு **17—11—73** சனிக்கிழமை மாலை 6-5 மணிக்கு நடைபெறும். வருக! வருக!!

இடம் : கே. இராமய்யா செட்டியார் ஏ. ஆர். சி மகளிர் பள்ளி. 44, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600001

இங்ஙனம்.

நக்கீரர் கழகத்தினோம்.

ஒவ்வொரு திங்களும் மூன்றாவது சனிக்கிழமை "கல்வெட்டியல்" தொடர் சொற்பொழிவு. சொற்பொழிவுகளின் முடிவில் தேர்வில் முதலாவதாக வெற்றி பெறுவோருக்குத் "தமிழ்த் தென்றல் திரு. **வி. க.**" வெள்ளிப் பதக்கமும், தவறாது வருபவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப் பெறும்

பாராட்டும் பரிசளிப்பும்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகத் தஞ்சைப் பெரு வணிகர், நகர மன்றத் தலைவர். திருவாளர் S. பெத்தண்ணன் அவர்களும், பொழிற் றொண்டராகவும் அமைச்சராகவும் கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளையின் திருக் குமாரர், ஓய்வுபெற்ற கோட்டாட்சித் தலைவர், திருவாளர் V. சுப்பிரமணியன் B. A, அவர்களும் சங்கச் சான்றோர்களால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்குச் சங்க விளையாட்டுக் கழகத்தின் சார்பில் 12—11—73-ஆம் நாள் திங்கட் கிழமை மாலை 4-30 மணியளவில் சங்கப் பூப்பந்தாட்டத் திடலில் பாராட்டு விழா நடைபெற்றது விழாவுக்குக் கரந்தை திராவிட கூட்டுறவு வங்கியின் தலைவரும், சங்கக் கல்வி நிலையங்களின் தாளாளருமான திருவாளர் ச சுந்தரம் B. A., B L. அவர்கள் தலைமை வகித்தார்கள். கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வரும், உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரும், இராதாகிருட்டின தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியரும் திக்கற்ற மாணவர் இல்லக் காப்பாளரும், கரந்தைத் தமிழ்ச் சங்க நூலகப் பொறுப்பாளரும் தங்கள் தங்கள் நிலையங்களின் அறிக்கைகளை முறையே வாசித்தார்கள் விழாத் தலைவரின் பாராட்டுரைக்குப் பின்னர். நகராட்சி மன்ற உறுப்பினரும் சங்க நிறைவேற்றுக் கழக உறுப்பினருமான திருவாளர் A. V. பதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள் பாராட்டுப் பெற்ற சங்க அமைச்சரவர்கள் தம் நன்றியுரையில், "எனது எண்ணங்களையெல்லாம் தொண்டின் வழியாகப் பேசவைப்பேன். சங்கத்தின் புகழை மேலும் வளர்க்கப் பாடுபடுவேன்' என்று கூறினார்கள். சங்கத் தலைவரவர்கள் தம் நன்றியுரையில், "அறிக்கைகளில் கூறப்பட்ட வேண்டுகோள்கள் நிறைவேற்றப்படும் என்றும். சங்கக் கல்வி நிலையங்களில் பயிலுகின்ற எல்லா மாணவர்களும் வெற்றி பெற்றார்கள்: நூற்றுக்கு நூறு விழுக்காடு பெற்றார்கள் என்ற புகழைத் தேடித்தர ஆசிரியர்கள் பாடுபட வேண்டு'' மென்றும் கூறினார்கள்.

அதுபோழ்து, சங்க விளையாட்டுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தீபாவளித் திருநாள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் சங்கத் தலைவரவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி. புலவர் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவியருள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் மாணவனுக்கும் மாணவிக்கும் ஆண்டு தோறும் சங்க விளையாட்டுக் கழகத்தாரால் அளிக்கப்படுகின்ற பரிசுகளையும் சங்கத் தலைவரவர்கள் வழங்கினார்கள் இராசராச சோழனின் பிறந்த நாட் சதய விழாக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசுகளைப் பெற்ற உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்க்கும், பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற புலவர் கல்லூரி மாணவர்க்கும் பராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. விழாத் தலைவரவர்களின் முடிவுரைக்குப் பின்னர்ப் பேராசிரியர். ச. பாலசுந்தரம் அவர்கள் நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நடந்தேறியது.

தமிழ் வாழ்க

தண்டமிழ்த்தொண்டரும், தமிழகப் புலவர் குழுவை அமைத்துப் பேணிவருபவரும்,
தகவுசான்ற வணிகருமான

முத்தமிழ்க்காவலர்

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின்

75-ஆம் பிறந்த நாள் விழாவாகிய

முத்துவிழாவின்போது

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் உளமுவந்துரைக்கும்

புறநிலை வாழ்த்து

1. சீர்வளர்ந் தொளிரத் தெய்வத் திருவளர்ந் தோங்கி இந்தப்
பார்வளர்ந் திலங்கப் பண்ணார் பைந்தமிழ் மலர்ந்து பொன்னி
நீர்வளர்ந் துயிர்கள் வாழ நிலவளம் கமழச் சோழர்
பேர்வளர்ந் துலகம் போற்றும் பெருமையோ டுயர்ந்து நாளும்

2. கண்ணனும் அன்னை யாம்முக் கண்ணனும் அருளைப் பாய்ச்சத்
திண்ணிய கலைகள் மல்கும் திருச்சிராப் பள்ளி என்னும்
தண்ணரும் பதியில் சீர்த்த தமிழ்க்குடி யதனிற் சான்றோர்
உண்ணெகிழ்ந் துவந்து போற்ற உதித்தநற் பெரும்பே ருள!

3. இசையநின் குலத்தா ரெல்லாம் இயற்றிய தவமொன் றோ, தென்
திசைவளர் தமிழும் தென்னர் தேர்ந்தநற் கலையும் பன்னாள்
நசையுறச் செய்த நோன்பும் நறுந்தமிழ் மகவாத், தேரூர்
வசையறத் தமிழ்நாட் டிற்கு வழங்கின என்போம். வாழ்க!

4. செல்வமும் புகழும் சேர்ந்த செழுங்குடி தழையத் தோன்றிக்
கல்வியும் கலையும் தேர்ந்து கடமையோ டுரிமை ஓர்ந்து
பல்வளம் நல்கும் பண்பார் வாணிகம் பயின்று மேவி
நல்வகை நாட்டார் போற்ற நடையினுல் உயர்ந்த போதும்

5. தன்பெரும் புகழும் வாழ்வும் சாலுமென் றமையா தெண்ணி
மன்புகழ் தமிழும் மூன்று மன்னர்முன் புரந்த நாடும்
இன்புறத் தொல்லோர் தந்த எழில்மிகு கலைகள் வாழ
முன்புவந் தருந்தொண் டாற்ற முனைந்தமுத் தமிழ்க்காவலரே!

6. தகவினால் விளங்கும் தெய்வத் தமிழ்அரி யணைமீ தேறி
மகிழ்தரு செங்கோ லோச்ச, மாற்றவர் சூதும் பொய்யும்
புகையுறத், தமிழ்நா டுற்ற புரையற, எழுத்தால் பேச்சால்
தொகைமிகு பணிசெய் தோங்கித் துலங்குநல் லண்ணால்! வாழ்க!

7. வள்ளுவன் உள்ளந் தேர்ந்து வகைப்படுத் தறத்தின் ஆறு
வெள்ளமிட் டெழுந்து பாய விரிவுரை செயும்பே ராசான்!
தன்னரும் சித்தர் தந்த தமிழ்மருத் துவத்தின் சால்பை
உள்ளவா றுணர்த்தித் தொன்மை உயர்கலை வளர்ப்போய் வாழ்க!

8. அருள்வளர் நிலையம் கல்வி அளித்திடும் நிலையம் மக்கள்
தெருள்கொளப் பணிசெய் தோங்கும் செழுந்தமிழ் மன்றம் ஆக்கப்
பொருள்வளர் நிலையந் தோறும் பொருந்திப்பங் கேற்று நாடு
மருளறத் தொண்டு செய்யும் மறுவிலாச் செம்மால்! வாழி!

9 முந்துமுச் சங்க வாழ்வு முகிழ்த்திடக் கரந்தை யின்கண்
பைந்தமிழ்ச் சங்கங் கண்ட பண்புசால் தமிழ வேள்போல்
செந்தமிழ்ச் சங்கம் ஒன்றைத் திருச்சியில் நிறுவி எம்மோர்ச்
சிந்தையை இனிக்கச் செய்த திறல்மிகு விசுவ நாத!

10. ஏழெழு புலவோர் தம்மை இணைத்தொரு குழுவாய், நாடும்
யாழெழு தமிழும், ஓங்க நறும்பணி புரியச் செய்து
பூழியர் செழியர் சோழர் புகழெலாம் பொலியக் கொண்டோய்!
வாழியர் ஊழி ஊழி வண்புகழ் தழைய வாழி!

11. வெற்றியால் முற்றி முத்து விழாக்கொளும் பெரியோய் உன்றன்
நற்றவத் துணை நன் மக்கள் நறுமரு மக்கள் பேரர்
சுற்றமோ டினிது மேவித் தொண்டுறு புகழால் ஓங்கி
உற்றுல கேத்தப் பல்லாண் டொண்டமிழ் போல வாழி!

கருந்திட்டைக்குடி.
11—11—1973.

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.

மதிப்புரை.

[யாப்பருங்கலக் காரிகை அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
பதிப்பாசிரியர். சு. சாமிஐயா, எம். ஒ எல்.
பொதுப்பதிப்பாசிரியர் டாக்டர் வ சுப மாணிக்கம்.
விலை ரூபா 2—00]

திருப்பனந்தாள் மடத்துப் பொருளுதவியுடன் அடக்க விலைப் பதிப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பில பதிப்பித்து வெளியிடப் பட்டுள்ள யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல் பழைய உரையுடன் அழகுற அச்சிடப்பட்டுள்ளது. நூலின் பொதுப் பதிப்பாசிரியராகிய டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தம் பதிப்புரையில்

"ஒவ்வொரு இயலுக்கு முன்னும் ஆற்றொழுக்கான கருத்துச் சுருக்கம், ஒவ்வொரு இயலின் பின்னும் வேண்டிய கருத்து விளக்கம், பாவுக்கும் பாவினங்கட்கும் வரைபடம் அமைத்தல், குறியீடு காட்டல், மேற்கோள் நூல்களைப் பக்கத்தே சுட்டல், அருஞ் சொற் பொருள் விளக்கம் என்ற நற் கூறுகள் இப்பதிப்பில் உள, ஆதலின் மாணவர்க்கு இப்பதிப்பு ஏற்ற வழித் துணையாகும்" என்று எழுதியிருப்பது இப்பதிப்பின் சிறப்பை நன்கு விளக்கப் போதுமானதாகும்.

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பதிப்புப் போன்று பொருளுணர்தற்கரியனவும் எடுததுக் காட்டுகளாக கொடுக்கப்பட்டுள்ளனவுமாகிய பாடல்களுக்கு ஓரிரு சொற்றொடர்களில் கருத்து எழுதி இருப்பின் நலமாக இருந்திருக்கும்.

அருஞ்சொற் பொருள் விளக்கம் அருமையாகவுள்ளது. பரந்தானு என்பதற்கு மிகவும் பரந்த என உரை கொள்வது தக்கது. நாய்கீர் என்பதனை நாகீர் எனக் கொண்டு இளையோரே எனப் பொருள் கூறுவதும், முதுக் குறைந்தனளே என்பதற்குப் பூப்பெய்தினள் என்று பொருள் கூறுவதும் பொருந்துமெனத் தோன்றவில்லை. அச்சுப் பிழை திருத்துவதில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். பிழை திருத்தம் என்னும் பகுதியில் முதல் வரியே பிழையாக வுள்ளது வியப்பினைத் தருகிறது

மிகச் சிறந்த இப்பதிப்பு ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் மிகுதியும் பயன்தரவல்லது. ஆதலின் அனைவரும் இந்நூலை வாங்கிப் பயன் பெற வேண்டுகிறோம்.